

தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (04.10.2024) வனத் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி தலைமையில் வனத்துறை அலுவலர்களுடன் துறை தொடர்பான செயல்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வனத் துறை செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் வந்த உயர்கல்வித்துறை

# அமைச்சர் கோவி.செழியனுக்கு பூண்டி.கே.கலைவாணன் தலைமையில் உற்சாக வரவேற்பு!

## கல்லூரி மாணவிகள் திரண்டுவந்து பூங்கொத்து கொடுத்து வாழ்த்தினர்!

திருவாரூர்,அக். 6-

திருவாரூர் வருகைதந்த தமிழ்நாடு அரசின் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் .கோவி.செழியனுக்கு மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் கழக நிர்வாகிகள் திரண்டு உற்சாக வரவேற்பளித்தனர். கல்லூரி மாணவிகள் அமைச்சருக்கு பூங்கொத்து கொடுத்து வாழ்த்தினர்.

தமிழ்நாடு முதல்வர், ,திராவிட நாயகர் தளபதி அவர்களின் நல்லாட்சியை மேலும் வலுப்படுத்தும் வகையில் புதிதாக பொறுப்பேற்றிருக்கும் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் திருவாரூர் மாவட்ட நிர்வாகிகளை சந்தித்தார். காட்டூர் கலைஞர் கோட்டத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பு நிகழ்வில் அமைச்சர் கோவி.செழியன், மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தி,கலைஞர் அவர்களின் தாயார் அஞ்சுகத்தம்மையார் நினைவிடத்தில் அஞ்சுகத்தம்மையார் , முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் உள்ளிட்டோர் படங்களுக்கு மரியாதை செலுத்தி வணங்கினார்.

இந்த சந்திப்பின்போது திருவாரூர் மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றியக் குழு தலைவர்கள் புலிவலம் ஏ.தேவா, சோம.செந்தமிழ் செல்வன், துணைத்தலைவர்கள் ஆர். பாலச்சந்திரன், எம்.ராமகிருஷ்ணன், நகர்மன்ற தலைவர்கள் மன்னை.த. சோழராஜன், புவனப்ரியா செந்தில், பாத்திமா பஷீரா, முருகேசன், தலைமைசெயற்குழு உறுப்பினர்கள் ஞானசேகரன், ஆர்.எஸ். பாண்டியன், ப. ஆடலரசன், கோ.செல்வம், கணபதி, பொதுக்குழு உறுப்பினர்கள் கே.எஸ்.எஸ். தியாகபாரி, டி.செந்தில், ஆர்.முருகேசன், செல்வ. ஜெயதேவன் , கமாலுதீன், கலைவாணி மோகன், பிரிதிவிராஜ், காஞ்சிதுரை, திட்டக்குழு உறுப்பினர். இரா.சங்கர் மற்றும் மாநில , மாவட்ட, ஒன்றிய, நகர ,பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் ,கழக முன்னோடிகள் பெருந்திரளாக பங்கேற்று உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியனுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

முன்னதாக உயர்கல்வித்துறை கோவி.செழியன் வருகையை அறிந்த கல்லூரி மாணவர்கள் நூற்றுக் கணக்கில் கலைஞர் கோட்டம் முன்பு திரண்டு அமைச்சருக்கு பூங்கொத்து கொடுத்து வாழ்த்துகளை தெரிவித்தனர். திருவாரூர் வந்திருந்த அமைச்சர் கோவி.செழியனுடன் எஸ்.கல்யாணசுந்தரம் எம்.பி., திருப்பனந்தாள் ஒன்றிய செயலர் அண்ணாதுரை மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



சுற்றுலாத் துறை அமைச்சராக பொறுப்பேற்று முதன் முதலாக ரயில் மூலம் சேலம் ஜங்ஷன் ரயில் நிலையம் வந்த இரா.இராஜேந்திரனுக்கு பொது மக்கள். கட்சி நிர்வாகிகள் எழுச்சி மிகு வரவேற்பு அளித்தனர். மாவட்டக் கழக செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம். சேலம் கிழக்கு டி.எம். செல்வகணபதி எம்.பி சேலம் மேற்கு சேலம் மத்திய மாவட்டக் கழக நிர்வாகிகள் ஜி.கே. சுபாசு, மு. கார்த்திகேயன். சி.ராஜேந்திரன். கே.டி. மணி, தாமரைக்கண்ணன், மாநகர செயலாளர் பா. ரகுபதி, துணைச் செயலாளர்கள். வி. கணேசன். தினகரன், கோமதி. பரமசிவம். எம்.எம். ஷெரீப், மேயர். ஆ.ராமச்சந்திரன். கே.டி.ஆர். தனசேகரன். ஏ.எஸ்., சரவணன், கே.ஜெய், கேபிள்.ராஜா, சாந்த மூர்த்தி. சி.பிரகாஷ் மனமேடு டி.மோகன், ஜெகதீஷ், பன்னீர்செல்வம், தமிழரசன். ஆகியோர் வரவேற்றனர்.



கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் நிதி நிறுவனத்தின் 120வது ஆண்டு பேரவை கூட்டத்தில் கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் நிதி தலைவரும், எம்.பியுமான சு.கல்யாணசுந்தரம் நிதியின் ஆண்டறிக்கை பற்றி விளக்கி பேசினார். உடன் துணைத் தலைவர் செ.இராமலிங்கம், இயக்குனர்கள் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, பிரகாசம், துரைராஜ், அம்பிகா, குரு பிரசாந்த் உள்ளிட்ட நிதி நிறுவனத்தின் அதிகாரிகள் உள்ளனர்.




விழுப்புரம் தெற்கு மாவட்டம் – கோலியனூர் தெற்கு ஒன்றியம் – வி அரியலூர் மற்றும் பில்லூர் ஆகிய ஊராட்சிகளில் ஒன்றிய செயலாளர் தே.முருகவேல் தலைமையில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழாவை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன்கௌதமசிகாமணி கலந்துகொண்டு கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றிய செயலாளர்கள் க.மும்மூர்த்தி, கல்பட்டு வி.இராஜா, ஒன்றிய குழுத் தலைவர் சச்சிதானந்தம், துணைத் தலைவர் உதயகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

